விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 034 வள்ளுவர் ஆண்டு 2057 தை 08 வியாழக்கிழமை (22.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2026
JANUARY ஜனவரி
23 24 25
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 1 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

## பிரித்தானியாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலிடுவார்கள்

### அரசாங்க அதிபரிடம் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்



(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்றுக் காலை 8.15 மணிக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## 16ஆவது யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி நாளை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

16ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 24ஆம் திகதி 15ஆம் பக்கம் பார்க்க

## ரி20 உலகக் கிண்ணம்

### காட்சி சுற்றுப் பயணம் அநுர தலைமையில் ஆரம்பம்



15ஆம் பக்கம் பார்க்க

## கல்வி மறுசீரமைப்பை அமுலாக்க

# முறையான பொறிமுறையை நிறுவுவதற்கு நடவடிக்கை

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



*(கொழும்பு)*

கல்வி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிபுணர்கள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினர்களையும்ஒன்றிணைத்து, முறையான சட்டக் கட்டமைப்புடன் கூடிய பொறிமுறையை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்போம்

### ஐ.எம்.எப் உறுதி

05ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாணத்தில்

## முதலீட்டு உச்சி மாநாடு யாழில் நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு ஏற்பாடு 02ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் 7 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி 15ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் இரசாயன தொழிற்சாலையை ஆரம்பிக்க

### ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு

(பரந்தன்)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க முதற்கட்டமாக 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று கலந்து 02ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரந்தன்...

கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

40 வருடங்களின் பின்னர் பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு அரச - தனியார் கூட்டுப் பங்காண்மை மூலமாக முதலீடுகளை ஈர்த்து, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முழுமையாக இயக்கப்படவுள்ளதால், புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் இவ்வாறான நிலையான உற்பத்திகளில் முதலீடு செய்ய முன்வர வேண்டும். இது உங்களுக்கான மிகச் சிறந்ததொரு வாய்ப்பாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அழைப்பு விடுத்தார்.

போர்ச் சூழல் காரணமாக 1985ஆம் ஆண்டு மூடப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்காக, அரசாங்கத்தால் முதற்கட்டமாக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் 9 மாதங்களில் அடிப்படை உட்கட்டுமானங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், சுமார் 6.3 பில்லியன் ரூபா முதலீட்டில், அரச - தனியார் கூட்டுப் பங்காண்மை மூலம் 30 மாதங்களில் இத்தொழிற்சாலை முழுமையாக நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தொழிற்சாலை இயங்கிய காலத்தில், குளோரின், கொஸ்டிக் சோடா மற்றும் ஹைதரோ குளோரிக் அமிலம் போன்றவற்றை எமது மண்ணில், எமது மக்களின் உழைப்பிலேயே உற்பத்தி செய்தோம். ஆனால், கடந்த 40 வருடங்களாக இவற்றையெல்லாம் நாம் டொலர் கொடுத்து இறக்குமதி செய்து வந்தோம். இன்று அந்த நிலைமை மாற்றியமைக்கப்படப் போகின்றது. இனிவரும் காலங்களில் எமது தேவை போக, எஞ்சியவற்றை ஏற்றுமதி செய்து டொலரை உழைக்கும் மையமாகப் பரந்தன் மாறப்போகின்றது என்றார். (ம-7)


# சேவை நலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும்



எமது கல்லூரியில் 12 வருடங்கள் ஆசிரியராக சேவையாற்றி ஓய்வுபெறும்

**திருமதி யூட் ஜெயக்காந்தன் இக்னேசியா ஜெயசிறி (B.A,PGDE)**

**சேவை விபரம்**

Best Wishes!

03.05.1999 - 11.01.2001 - தீவக வலயக்கல்வி அலுவலகம் - எழுதுநர் சேவை

12.01.2001 - 31.01.2001 - யா/மெய்கண்டான் மகா வித்தியாலயம் (ஆசிரியர்)

01.02.2001 - 19.01.2014 - யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்

20.01.2014 - 25.02.2014 - யா/ பண்டத்தரிப்பு உயர்தர பெண்கள் பாடசாலை

26.02.2014 - 22.01.2026 - யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை

அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக் காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடனும் மன மகிழ்ச்சியோடும் என்றும் இன்பமாய் வாழ வாழ்த்துவதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

(6619)


## முதலீட்டு...

செய்யப்பட்டுள்ள 'வடக்கு முதலீட்டு உச்சி மாநாடு - 2026' (Northern Investment Summit – NIS26), யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று புதன்கிழமை ஆரம்பமானது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மேலும் இலங்கைக்கான பிரித்தானிய மற்றும் மலேசிய உயர்ஸ்தானிகர்கள், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளி, தென்னிந்தியாவுக்கான இலங்கைப் பிரதித் தூதுவர் ஆகியோர் பங்கேற்று சர்வதேச முதலீட்டு வாய்ப்புகளை உறுதிப்படுத்தினர்.

பிரதமரின் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை (BOI), ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) மற்றும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபை ஆகியவற்றின் தலைவர்கள் கலந்துகொண்டு முதலீட்டாளர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கினர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள இயற்கை வளங்கள், மனித வளம் மற்றும் கடல்சார் வளங்களைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல், ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதே இந்த உச்சிமாநாட்டின் பிரதான நோக்கமாகும். (ம-7)


**கார், வான் வாடகைக்கு**

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.
யாழ். ⟷ கொழும்பு
தினசரி வான் சேவை.

**074 13 13 413**

(6623)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் மீள் சுழற்சிக்குரிய கழிவுப் பொருட்கள் விற்பனை கேள்வி கோரல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை கல்லுண்டாய் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் பின்வரும் விபரப்படியான மீள் சுழற்சிக்குரிய கழிவுப்பொருட்களை 15.02.2026 ஆம் திகதி தொடக்கம் 14.02.2027 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள ஆர்வமுடையவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப்பத்திரத்தை 22.01.2026 திகதியில் இருந்து 05.02.2026 வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாயில் உள்ள எமது அலுவலகத்தில் ரூபா 1,000.00 செலுத்திப் பெற்றுகொள்ள முடியும்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி : 05.02.2026 பி.ப 3.00 மணி
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி :06.02.2026 மு.ப 10.30 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 06.02.2026 மு.ப. 10.30 மணி

கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை தலைமைய லுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6616 என்ற தொலைபேசி ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

| இல. | விற்பனைக்குரிய பொருட்களின் விபரம் |
|---|---|
| 01 | கண்ணாடி போத்தல்கள் |
| 02 | பிளாஸ்ரிக் போத்தல், கான்கள் (அழுத்தப்பட்டது / துகள்களாக்கப்பட்டது) |
| 03 | பிளாஸ்ரிக் மூடிகள் |
| 04 | தகர ரின்கள் |
| 05 | காட்போட் மட்டைகள் |
| 06 | இரும்புப் பொருட்கள் |
| 07 | பொலித்தீன் பைகள் |

க.யெசீதன்
தவிசாளர்,
வலிகாமம், தென்மேற்கு
பிரதேச சபை, மானிப்பாய்.

(C-4859) 22.01.2026

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 - 12 - 1936



மறைவு
20 - 01 - 2026

## திருமதி பத்மதேவி பாலசிங்கம்

*மியன்மாரை(பர்மா) பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு றொட்டியாலடி தோம்பை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மதேவி பாலசிங்கம் அவர்கள் கடந்த (20.01.2026) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சுப்பிரமணியம் - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் பாலசிங்கம்(ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமையாளர் - இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் வனஜா(அவுஸ்திரேலியா), சுகுணா (தேசிய சேமிப்பு வங்கி யாழ். கிளை) அன்புத் தாயாரும் ராகவன் (அவுஸ்திரேலியா), விக்னவேல் (பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜசோதன், நிந்துஷன்(யாழ் இந்துக் கல்லூரி), மதுரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடேசன் (இங்கிலாந்து), காலஞ்சென்றவர்களான பரமநாதன்(பரம்), பத்மநாதன் (கதிர்), பாலநாதன்(பாலன்), கமலாதேவி(மீனா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுப்பிரமணியம் (இங்கிலாந்து), இராசமணி (நோர்வே), காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, செல்வமுத்து, பாக்கியஇலட்சுமி, சின்னத்தங்கம், முருகையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.01.2026 அன்று தோம்பை வீதி உடுவில் கிழக்கில் நடைபெற்று மருதனார்மடம் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தோம்பை வீதி,
உடுவில் கழக்கு,
சுன்னாகம்.

*தகவல் :* மூ.பாலசிங்கம்
021 224 0497, 077 670 3659
074 157 0876

(6625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் வித்தை காட்டும் சாரதிகளுக்கு ஆபத்து!



**(கொழும்பு)**

**பிரதான வீதிகளில் பாதுகாப்பற்ற முறையில் உந்துருளிகளை செலுத்தும் அனைத்து நபர்களையும் உடனடியாகக் கைது செய்யுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பிரிவு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பொறுப்பதிகாரி, பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.**

அதிக வலுக்கொண்ட உந்துருளிகளைப் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அந்த வாகனங்களைக் கைப்பற்றி அரசாங்கத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

உந்துருளிகள் என்பது ஒரு வரது பயண வசதிக்காகவே தவிர, பிரதான வீதிகளில் பந்தயங்களில் ஈடுபடுவதற்கோ, பாதசாரிகளை ஆபத்தில் தள்ளுவதற்கோ அல்லது ஒழுக்கத்துடன் வாகனங்களைச் செலுத்துபவர்களுக்கு இடையூறு விளைவிப்பதற்கோ அல்ல.

குறிப்பாக, இளைஞர்கள் மத்தியில் தற்போது உருவாகியுள்ள இந்த கலாசாரம் மிகவும் பயங்கரமானது.

எனவே, அதிக வேகத்துடன், அஜாக்கிரதையாகவும் ஆபத்தான முறையிலும் வாகனங்களைச் செலுத்துபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளோம்.

தற்போது 18 வயதுக்கும் குறைந்தவர்கள் கூட உந்துருளிகளை செலுத்துகின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி அதிவேகமாகச் சென்று ஏற்பட்ட விபத்தில் ஒரு இளைஞன் உயிரிழந்த நிலையில், அவரது இறுதிக்கிரியை ஊர்வலத்திலும் பலர் தலைக் கவசம் இன்றி உந்துருளிகளில் ஆபத்தான முறையில் பயணித்தனர். இளைஞர்களின் இந்தப் போக்கு ஆரோக்கியமானது அல்ல. எனவே, சட்டத்தை மிகக் கடுமையாக நிலைநாட்ட பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோதமான அதிக வலுக்கொண்ட உந்துருளிகளை உடனடியாகக் கைப்பற்றி, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, அவற்றை அரசாங்க உடமையாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி)

# நோய்களின் அதிகரிப்பிற்கு வரி குறைபாடே காரணம்

## உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

தென்கிழக்கு ஆசிய நாடுகளில், மக்களின் நலனைப் பாதிக்கும் மதுபானம் மற்றும் இனிப்புக் கலந்த பானங்களின் விலை மலிவாக இருப்பதால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

வருமானம் உயர்ந்து வரும் சூழலில், இந்தத் தயாரிப்புகளின் விலை அதற்கேற்ப உயர்த்தப்படவில்லை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

புற்றுநோய்,. கல்லீரல் பாதிப்பு, உடல் பருமன், நீரிழிவு மற்றும் இதய நோய்களுக்கும் இந்தப் பானங்களுக்கும் நேரடித் தொடர்பு உள்ளது.

வரி குறைவாக இருப்பதால், மக்கள் இவற்றை எளிதாகக் கொள்வனவு செய்து பயன்படுத்துவதே நோய்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும், மதுபானங்களுக்கும் அதிக வரி விதிக்கப்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் அத்தகைய முறை பின்பற்றப்படாதமையால், அதிக போதையுள்ள மதுபானங்களும் குறைந்த விலையில் கிடைப்பதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் குளிர்பானங்கள் மற்றும் இனிப்புக் கலந்த பழச்சாறுகள் மீதான வரியானது, நுகர்வைக் குறைக்கும் அளவுக்குப் போதுமானதாக இல்லை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (நி)

# ஆரோக்கியமற்ற நிலையில் காற்றின் தரம்

(வவுனியா)

வவுனியா கோட்டை, காலி, அநுராதபுரம், பொலன்னறுவை பல பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக, பொதுமக்களுக்குப் பல்வேறு உடல்நலப் பாதிப்புகள் ஏற்படக்கூடும். குறிப்பாகச் சுவாசப் பிரச்சினைகள் உள்ளவர்கள் மற்றும் முதியவர்கள் போன்ற உணர்திறன் கொண்ட குழுவினர் மிகவும் தீவிரமான பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி)

# யானை-மனித மோதலை விரைந்து கட்டுப்படுத்துங்கள்

## ரவிகரன் எம்.பி வேண்டுகோள்



(கொழும்பு)

வன்னியில் அதிகரித்துள்ள இவ்வாறான யானை-மனித மோதல்களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு சுற்றாடல் அமைச்சர் வைத்திய கலாநிதி தம்மிக்க பட்டபெந்தி அவர்கள் நேரடியாக முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு வருகைதந்து நிலமைகள் தொடர்பில் ஆராய்வதுடன், யானை-மனித மோதல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்மொள்ள வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் வாழ்வுக்கும் வளமான வாழ்வாதாரத்துக்கும் போருக்குப் பின்னரான காலத்தில் நிலவும் புதிய அச்சுறுத்தலாகவே காட்டுயானை - மனித மோதலை வன்னி நிலம் காண்கிறது.

தொடர்ச்சியாக ஒப்பரிய மனித உயிர்கள் யானை மோதலில் இறப்பது ஆழ்ந்த வேதனைக்குரியது.

கடந்த 17.01.2026 சனிக்கிழமையன்று அதிகாலை முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தேறாங்கண்டல் பகுதியில் வயல்காவலில் இருந்த பொன்முடி சுஜிந்தன் என்னும் 19வயதான இளைஞன் காட்டுயானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த 2020-2024 வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் இடம்பெற்ற காட்டுயானை மோதலில் 739 மக்கள் உயிரிழந்துள்ளனர்.

காணி அபகரிப்பில் காட்டுகின்ற அதே அக்கறையை வன ஜீவராசிகள் திணைக்களம், காட்டுயானை - மனித மோதலைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் காட்டுவதில்லை.

இவ்வாறு அதிகரித்துள்ள யானை-மனித மோதல்களைக் கட்டுப்படுத்த சுற்றாடல் அமைச்சு வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவும் புலம் பெயர் உறவுகள்

(கொழும்பு)

டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் பெற்றோரை இழந்த சிறுவர்களின் கல்வி மற்றும் நலன் மேம்பாட்டிற்காக, பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சுடன் இணைந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

இது தொடர்பான சந்திப்பு பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தலைமையில் நடைபெற்றது.

அதற்கமைய, அமைச்சின் முழுமையான கண்காணிப்பின் கீழ், பெற்றோரை இழந்த சிறுவர்கள் உயர் கல்வியை நிறைவு செய்யும் வரை தேவையான அனைத்து செலவுகளையும் ஏற்க தயாராக இருப்பதாக அறக்கட்டளை ஒன்று தெரிவித்துள்ளது.

இதனிடையே, அனர்த்த சூழ்நிலைகளில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான நிரந்தர நிதி அமைப்பின் அவசியம் குறித்தும் பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனே அரசின் முதன்மையான இலக்கு எனவும் பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்




## இளையோர் உலகக் கிண்ணம்

# 106 ஓட்டங்களால் அயர்லாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது இலங்கை

**இளையோர் உலகக்கிண்ண தொடரில் அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை இளையோர் அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளது.**

நமீபியாவின் விண்ட்ஹோக் மைதானத்தில் இடம்பெற்ற குறித்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் விமத் தின்சார 95 ஓட்டங்களையும் மற்றும் சாமிக்க ஹீனட்டி கல 51 ஓட்டங்களையும் பெற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

அயர்லாந்து தரப்பில் ஒலி ரைலி 2 விக்கெட்டுக்களையும் ரூபன் வில்சன் மற்றும் லூக் முரே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

268 ஓட்டங்கள் என்ற சவாலான இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, இலங்கை பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறியது. அயர்லாந்து அணி 40.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணியின் துல்னித் சிகேரா 4 விக்கெட்டுக்களையும், ரசித் நிம்சர 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இலங்கை இளையோர் அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவு செய்தது. இதனூடாக இலங்கை அணி அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளது. (3)

# ஐ.சி.சியின் நிபந்தனைக்கு அடிபணிய மாட்டோம்!

## பங்களாதேஷ் அதிரடி

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க இந்தியா செல்லமாட்டோம் என்று அறிவித்து இருக்கும் பங்களாதேஷ், பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதால் தங்கள் அணிக்குரிய ஆட்டங்களுக்கான போட்டியை நடத்தும் மற்றொரு நாடான இலங்கைக்கு மாற்ற வேண்டும் என்று பிடிவாதம் காட்டி வருகிறது.

இந்த விடயத்தில் பேச்சுவார்த்தையில் முடிவு கிடைக் காததால் புதன்கிழமைக்குள் இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்று பங்களாதேஷிற்கு கெடு விதித்துள்ள சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) இந்தியா வந்து விளையாட மறுத்தால் பங் களாதேஷிற்கு பதிலாக தரவரிசையில் அடுத்த இடத்தில் இருக்கும் அணியை சேர்க்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் பங்களாதேஷ் இடைக்கால அரசின் விளையாட்டு ஆலோசகர் ஆசிப் நஸ்ருல் இது பற்றி கருத்து தெரிவிக்கையில்,

"இந்திய கிரிக்கெட் வாரியத்தின் விருப்பத்திற்கு ஏற்ப சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் விதித்துள்ள எந்தவொரு நிபந்தனைக்கும் பங்களாதேஷ் அடிபணியாது"என்றார். (3)



## ஆபிரிக்க கிண்ண கால்பந்து

# வாகை சூடியது செனகல்



ஆபிரிக்க கிண்ணக் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டம் மொராக்கோவின் ரபாத் நகரில் நடைபெற்றது.

இதில் செனகல்- மொராக்கோ அணிகள் மல்லுக்கட்டின. தொடக்கம் முதலே பரபரப்பாக நகர்ந்த ஆட்டத்தில் வழக்கமான நேரத்தில் எந்த அணியினரும் கோல் போடவில்லை.

இறுதி நிமிடத்தில் மொராக்கோ அணிக்கு பெனால்டி வாய்ப்பை நடுவர் வழங்கினார். இது ஒரு தலைபட்சமான முடிவு என்று எதிர்ப்பு தெரிவித்த செனகல் வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறினர்.

அத்துடன் மைதானத்திற்குள் ரசிகர்கள் நுழைய முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சர்ச்சையால் 14 நிமிடங்கள் ஆட்டம் தடைபட்டது. பிறகு ஒரு வழியாக சமாதானம் அடைந்த செனகல் வீரர் கள் மீண்டும் களம் திரும்பினர்.

பெனால்டி வாய்ப்பில் மொராக்கோ வீரர் பிராஹிம் டியாஸ் அடித்த கோலை செனகல் கோல் கீப்பர் எடுவர்டோ மென்டி எளிதில் தடுத்தார். தொடர்ந்து கூடுதல் நேரத்தில் செனகல் வீரர் பாப் கியே கோல் போட்டு அசத்தினார்.

முடிவில் 1-0 என்ற கோல் கணக்கில் செனகல் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சொந்தமாக்கியது. ஆனால் ஆட்டத்தில் பாதியில் நடையை கட்டிய வீரர்களின் செயலை வன்மையாக கண்டித்துள்ள சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவர் இன் பான்டினோ இது போன்ற சம்பவத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனப் பெயர் மாற்றமும் ஆதன உபபிரிவிடலும்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 06, நுணாவில் கல்வயல் வீதி, ஆதன இலக்கம் 125 (பழைய இலக்கம் 125) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது. தற்போது நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரவியலிங்கம் இந்துஜன் பெண் அஜித்தா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு, எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்காக ஆதன உபபிரிவிடலுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த விநாசித்தம்பி பொன்னம்பலம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு. V.P. கார்த்திகேசு அவர்கள் முகதாவில் 15669 இலக்க 11.07.1992 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவ சுப்பிரமணியத்திற்கு வழங்கியுள்ளார்.

பின்னர் கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியமும் பெண் இராசேஸ்வரியும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு V.P. கார்த்திகேசு அவர்கள் முகதாவில் 16937 இலக்க 05.12.1994 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை அவ்வூர் விநாசித்தம்பி பொன்னம்பலத்திற்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த விநாசித்தம்பி பொன்னம்பலம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு S.P. மயில்வாகனன் அவர்கள் முகதாவில் 9143 இலக்க 08.04.1995 ஆம் திகதியில் நிறைவேற்றிய பொருத்த உறுதி மூலம் இவ் ஆதனத்தை மட்டுவில் தெற்கைச் சேர்ந்த முருகேசு துரைசிங்கம் மகள் பத்மாஜனிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த முருகேசு துரைசிங்கம் மகள் பத்மாஜனியும் கல்வயல் சாவகச்சேரி விநாசித்தம்பி பொன்னம்பலம் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை அவர்கள் முகதாவில் 554 இலக்க 19.01.2000 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை பெருங்குளம் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி பெண் யோகேஸ்வரிக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் நுணாவில் கல்வயல் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமியும் பெண் யோகேஸ்வரியும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை அவர்கள் முகதாவில் 3521 இலக்க 06.02.2016 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த சிவலிங்கம் கருணைராஜாவும் பெண் மனோன்மணியும் ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த சிவலிங்கம் கருணைராஜாவும் பெண்.மனோன்மணி ஆகியோர், சாவகச்சேரி பிரசித்த நொத்தாரிசு ச.குகப்பிரியா அவர்கள் முகதாவில் 197 இலக்க 15.06.2023 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திரவியலிங்கம் இந்துஜன் பெண் அஜித்தா ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை, கிராமசேவையாளர் பிரிவு ஜே/305 "காட்டுவளவு" நிலப்பரப்பு 3 இவ்வாதனத்தை நில அளவையாளர் மீசாலை வல்லிபுரம் சிவராசா அவர்களால் 2016 ஆம் ஆண்டு தை மாதம் 30 ஆம் திகதியன்று அளந்து வரையப்பட்ட 4867 ஆம் இலக்க அளவைப்படத்தில் நிலக்கூறு இலக்கம் 1 எனக் காட்டியுள்ளார். அதன்படி நிலப்பரப்பு 3 குழி 00.44 இவ்வாதனம் 2023ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் R.இராஜகோபாலு அளந்து வரைந்த 1237 இலக்க வரைபடத்தின் படி 2 துண்டுகளாக காட்டப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 16.54 இதில் 1ஆம் இலக்கத்துண்டு நிலப்பரப்பு 1 குளி 09.00 நிலப்பரப்பு ஒன்று குளி பூச்சியம் ஒன்பது தசம் பூச்சியம் பூச்சியம் இதற்கெல்லை.

கிழக்கு : குறித்த 8907 இலக்க படத்தின் 2ஆம் துண்டு ஆதனம்
வடக்கு : அறுதி விற்பவருக்குரிய ஆதனம்
மேற்கு :ஒழுங்கை
தெற்கு :முருகையா பெண் ஜெயந்தியின் ஆதனம்

இவ்வெல்லைக் காணியடங்கலும், அதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

இவ்வாதன பெயர் மாற்றம், ஆதன உபபிரிவிடல் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ் வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(6613)

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்போம்

## ஐ.எம்.எப் உறுதி

(கொழும்பு) —

**இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியம் தனது முழுமையான ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா உறுதியளித்துள்ளார்.**




சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் 2026ஆம் ஆண்டுக்கான உலகப் பொருளாதார மாநாட்டின் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பிலேயே இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

மேலும், அண்மையில் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு மத்தியில் இலங்கை மக்கள் வெளிப்படுத்திய மன உறுதியைப் பாராட்டிய அவர், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியம் துணை நிற்கும் எனத் தெரிவித்துள்ளார். (ஙி)

# முட்டை விலை வீழ்ச்சி

கடந்த வாரங்களுடன் ஒப்பிடுகையில் உள்ளூர் சந்தையில் முட்டை விலையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டையொன்று சுமார் ரூ.30க்கு விற்கப்படுவதாகவும் சில இடங்களில் 26, 28 ரூபாவிற்கும் விற்கப்படுவதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

முட்டை உற்பத்தி அதிகரித்துள்ளதே இந்த விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என குறித்த சங்கத்தின் செயலாளர் அனுரசிரி மாரசிங்க தெரிவித்துள்ளார். (ஙி)

# ஒரே நாளில் இரு தடவைகள் உயர்வடைந்த தங்கத்தின் விலை

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் வர்த்தகப் போர் அச்சம் காரணமாக, இலங்கை சந்தையில் நேற்றைய தினம் தங்கம் விலை இரண்டாவது முறையாகவும் சடுதியாக உயர்ந்துள்ளது.

அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கத்தின் தரவுகளின்படி, நேற்று முற்பகல் 24 கரட் தங்கம் பவுண் ஒன்றுக்கு 10,000 ரூபாயால் அதிகரித்திருந்த நிலையில், மீண்டும் தற்பொழுது பவுண் ஒன்றுக்கு 5000 ரூபாயால் சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று தற்பொழுது 385,000 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது.

22 கரட் தங்கம் பவுண் ஒன்று 356,125 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி, 24 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 48,125 ரூபாயாகவும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 44,516 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

நேற்று ஒரே நாளில் மட்டும் தங்கம் பவுண் ஒன்றுக்கு 15,000 ரூபாய் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


சர்வதேச சந்தையில் தங்கம் விலை ஒரு அவுன்ஸ் 4,800 அமெரிக்க டொலர்களைத் தாண்டியதே உள்ளூர் சந்தையில் இந்த அதிரடி மாற்றத்திற்கு முக்கிய காரணமாகும்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு இடையிலான வர்த்தகப் போர் பதற்றங்கள் உலகளாவிய முதலீட்டாளர்களை தங்கத்தை நோக்கி ஈர்த்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்திற்கு இடையூறான கால்நடைகள் மடக்கிப் பிடிப்பு

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அதிரடி நடவடிக்கை



(வவுனியா)

**போக்குவரத்திற்கும் பொதுமக்கள் பாதுகாப்பிற்கும் இடையூறு விளைவித்த 41 கட்டாக்காலி கால்நடைகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளன.**

வீதிகளில் அலைந்து திரிந்த கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நோக்கில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் நேற்று முன்தினம் இரவு அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அண்மைய நாட்களில் இரவு நேரங்களில் வீதிகளில் நிற்கும் கால்நடைகளால் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. இதனைத் தடுக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபை, பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகளில் கால்நடைகளை மடக்கிப் பிடிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நடவடிக்கையின் போது மொத்தமாக 41 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. அவை தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன.

முன்னதாக மக்களிடம் பல முறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தாலும், உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை கட்டுப்படுத்த தவறியிருந்தனர். இதனால் தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தலைமையில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட கால்நடைகளை மீட்டுக்கொள்ள உரிமையாளர்கள் ஒரு கால் நடைக்கு 10 ஆயிரம் ரூபாய் தொகையை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் கால்நடைகள் நிற்பதால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கவும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் பாதுகாக்கவும் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடரும் என தவிசாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-299)



யாழ்ப்பாணம்-வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய பெருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படம்:கஜிந்தன்)

### பரந்தன் தொழிற்சாலை

# உற்பத்தி ஆலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் பிரதான உற்பத்தி ஆலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்டம் பரந்தனில் கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் துணை அமைச்சர் சதுரங்க அபேசிங்க ஆகியோரின் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், வடமாகாண ஆளுநர், கிளி. மாவட்ட அரச அதிபர் சு.முரளிதரன் கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் துறைசார் திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (நி-315)








வட பிராந்தியத்திலுள்ள முதலீட்டு வாய்ப்புக்களை உலகிற்கு திறக்கும் நோக்கில் அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு முதலீட்டு உச்சி மாநாடு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள திருவள்ளுவர் கலாசார மையத்தில் ஆரம்பமாகி இன்று வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர், அமைச்சர்கள், வெளிநாடுகளின் தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர்கள், முதலீட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் முதன்முறையாக பட்டத்திருவிழாவும் பாரம்பரிய விளையாட்டுக்களும் புதுக்குடியிருப்பு குயின் பூங்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. (படங்கள்: சதீஸ்)

# இலங்கைக்கு கடத்தவிருந்த பல இலட்சம் மதிப்பிலான கஞ்சா பறிமுதல்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான 116 கிலோ கஞ்சா சுங்கத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அருகிலுள்ள இராமநாதபுரம் மாவட்டக் கடல் வழியாக கஞ்சா உள்ளிட்ட போதை பொருள்கள் மற்றும் மஞ்சள் உள்ளிட்டவைகளும் அதிக அளவில் கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அருகே கடல் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்தத் திட்டமிட்டு இருப்பதாக சுங்கத்துறையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து சுங்கத்துறை அதிகாரிகள் அந்தப் பகுதியில் கடந்த சில நாட்களாக தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த சூழ்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தோப்பு வல்லை கடற்கரை பகுதியில் வாகனம் ஒன்றில் வந்த சிலர் பொதிகளை இறக்கி வைத்து விட்டு சென்றிருப்பதாகத் தகவல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து சுங்கத்துறை அதிகாரிகள் அந்த பகுதிக்குச் சென்று தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது இலங்கைக்கு கடத்துவதற்காக தோப்புவலசை கடற்கரைப் பகுதியில் ஆங்காங்கே பதுக்கி வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகளை அதிகாரிகள் கைப்பற்றினர்.

குறித்த பொதிகளை சுங்கத்துறை துணை இயக்குனர் பிரகாஷ் தலைமையிலான அதிகாரிகள் அலுவலகத்திற்கு கொண்டு சென்று நிறுத்த போது 116 கிலோ கஞ்சா இருந்தது தெரிய வந்தது. இவற்றின் மதிப்பு இலங்கை பெறுமதியில் ரூபாய் 3 கோடி என்று கூறப்படுகிறது.

அந்தகடற்கரை பகுதிக்கு செல்லும் வழியில் சில இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமரா காட்சிகளில் அடிப்படையில் கடத்தல்காரர்களை கண்டறியும் பணியில் சுங்கத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். (3-104-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 09 - 1949 | 19 - 01 - 2026 |



## மயில்வாகனம் நாகேஸ்வரி

யாழ் மானிப்பாயை பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கு அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நாகேஸ்வரி அவர்கள் (19.01.2026) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், தெய்வானப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், பகீரதன் (யாழ்ப்பாணம்), பத்மலோஜினி(சுவிஸ்), அருட்செல்வன், அருந்ததி (கனடா), கலைவாணி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகராசா, பூபாலராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜன் (சுவிஸ்), சுஜாதா (இலங்கை), வருணாளினி(இலங்கை), லோகேஸ்வரன் (கனடா), இதய விஸ்ணு(இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், திலக்ஷன் (கனடா), நிரோஸ்(சுவிஸ்), திலக்ஷனா (இலங்கை), டினேஸ் (சுவிஸ்), கணபரன்(கனடா), சஜினா(கனடா), யுபபரன்(இலங்கை), சஜ்சனா (கனடா), உமயா(கனடா) மற்றும் காலஞ்சென்ற வசீகரன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.01.2026 இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(6608)

தகவல் :-
குடும்பத்தினர்

# ரூபாயின் பெறுமதி மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்றுடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று வீதத்தின்படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 305 ரூபாய் 89 சதம், விற்பனை பெறுமதி 313 ரூபாய் 43 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 409 ரூபாய் 91 சதம், விற்பனை பெறுமதி 422 ரூபாய் 71 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 357 ரூபாய் 27 சதம், விற்பனை பெறுமதி 368 ரூபாய் 87 சதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(நி)

# யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல் - 2026**

2026ஆம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையினை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 100.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை தபால் உறையில் இட்டு பதிவுத் தபாலில் "கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 11.02.2026 இற்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்,**
**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆவது மாடி,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,**
**இல12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

(C-4858)






noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பனிக்குள் புதைந்த கட்டடங்கள்
### அவசரகாலநிலை ரஷ்யாவில் பிரகடனம்



(மொஸ்கோ)
சுமார் ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றைத் தகர்த்தெறிந்து, ரஷ்யாவை உறைய வைத்திருக்கிறது தற்போதைய கடும் பனிப்பொழிவு.

இந்த ஆண்டு அங்கு வரலாறு காணாத வகையில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் தலைநகர் மொஸ்கோ மற்றும் பல் வேறு நகரங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பம் பனிப்பொழிவால் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளது.

அங்கு பனிக்குவியல்கள் 10 முதல் 40 அடி உயரம் வரை உயர்ந்துள்ளன.

நான்கு மாடி உயரமுள்ள கட்டிடங்கள் கூட பனிக்குள் புதைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரம் இன்றி, போக்குவரத்து முடங்கி, விமானச் சேவைகள் ரத்து செய்யப்பட்டு அந்தத் தீபகற்பமே தனித்துவிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடும் பனிப்பொழிவால் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் அங்கு அவசர கால நிலைப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)



## ஸ்பெயினில் மற்றொரு ரயில் விபத்து

### ❋ சாரதி உயிரிழப்பு
### ❋ 37 பேர் காயம்

(ஸ்பெயின்)
தெற்கு ஸ்பெயினில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளான சில நாட்களுக்குப் பின்னர் பார்சிலோனா அருகே பயணிகள் ரயில் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ரயில் சாரதி உயிரிழந்துள்ளதுடன், குறைந்தது 37 பேர் காயமடைந்தனர்.

இதில் ஐந்து பேர் படு காயமடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மாலை ரோடலீஸ் ரயில் கெலிடாவிற்கும் சாண்ட் சாதுர்னிக்கும் இடையிலான தண்டவாளத்தில் தடம்புரண்டு தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானதாக உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.


விபத்தினை அடுத்து அனைத்து பயணிகளும் ரயிலில் இருந்து வெளியேற்றப்பட்டதாக கேட்டலோனியா பிராந்திய தீயணைப்பு அதிகாரி கிளாடி கல்லார்டோ தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் சிலரை அருகிலுள்ள மொய்சஸ் ப்ரோகி, பெல்விட்ஜ் மற்றும் விலா ஃபிராங்கா வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதித்ததாக அவசர சேவைகள் தெரிவித்தன.

ஸ்பெயினின் வட கிழக்கு பகுதியை பலத்த புயல்கள் தாக்கியதால் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (நி)



## அமெரிக்கா
## கனடா, கிரீன்
### ட்ரம்ப் பகிர்ந்த




கிரீன்லாந்தில் அமெரிக்க தேசியக் கொடியை ஏந்தி நிற்பதுபோல் தனது AI படத்தையும் பகிர்ந்துள்ளார்.

எண்ணெய் வளம் மிக்க வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை கைது செய்து தமது நாட்டுக்கு நாடு கடத்திய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அடுத்த டென்மார்க் நாட்டின் தன்னாட்சி பகுதியான கிரீன்லாந்து, கனடா நாடுகளின் மீது கவனத்தை திருப்பி உள்ளார்.

கிரீன்லாந்தை முழுவதுமாக ஆக்கிரமிக்க வேண்டும் என்று அவர் பேசி வருவதற்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனத்தை பதிவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், வெனிசுலா, கனடா மற்றும் கிரீன்லாந்தை அமெ

ரிக்காவின்
பிட்டு வ
ட்ரம்ப் த
பதிவில்
ளார்.

இந்த
வெள்ளை
ஜனாதிப
ட்ரம்ப் த
அமர்ந்து
அருகில்
மற்றும்
யவை
பகுதிகள்

பட்டிய
இருக்கி
இவ

## ஓய்வை அறிவித்தார் சுனிதா வில்லியம்ஸ்



(வோஷிங்டன்)
அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவில் இருந்து ஓய்வு பெறுவதாக சுனிதாவில்லியம்ஸ் அறிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு நாசாவில் இணைந்த சுனிதா வில்லியம்ஸ், மூன்று முறை விண்வெளிக்குச் சென்று 608 நாட்கள் அங்கேயே தங்கியிருந்துள்ளார்.

விண்வெளியில் அதிக நாட்கள் இருந்தவர்களின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...வுடன் இணைந்த ...லாந்து, வெனிசுலா

## ... AI படத்தால் பரபரப்பு



**(வோஷிங்டன்)................ கனடா, கிரீன்லாந்து, வெனிசுலா ஆகிய நாடுகள் இனி அமெரிக்காவின் பகுதிகள் என்ற வரைபடத்தை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.**

...ின் பகுதிகளாக குறிப் ...வரைபடம் ஒன்றை ...தமது ட்ரூத் சோஷியல் ...் இதை பதிவிட்டுள்

...த போட்டோவில், ...ளை மாளிகையில் ...பதி அலுவலகத்தில் ... தமது இருக்கையில் ...து உள்ளது போன்றும், ...் வெனிசுலா, கனடா ...் கிரீன்லாந்து ஆகி ... அமெரிக்காவின் ...ள் என வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவருடன், பிரிட்டன் பிரதமர் கீர் ஸ்டார்மர், இத்தாலி பிரதமர் மெலோனி, பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் உள்ளிட்ட முக்கிய நாடுகளின் தலைவர்கள் திகைத்து இருப்பது போன்றும் போட்டோவில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு பதிவில், துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் மற்றும் வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ ஆகியோர் ட்ரம்புடன் நிற்பது போன்றும், அவர் கையில் அமெரிக்க நாட்டின் கொடியை பிடித்தபடி இருப்பது பேரன்ற போட்டோவை ட்ரம்ப் வெளியிட்டு இருக்கிறார்.

அவரின் அருகில் கிரீன் லாந்து அமெரிக்காவின் ஆளுகைக்கு உட்பட்டது என்று எழுதப்பட்ட போர்டு ஒன்றை ட்ரம்ப் பார்ப்பது போன்றும் அந்த போட்டோ காட்சிப்படுத்தப்பட்டு உள்ளது. அவரின் இந்த இரு போட்டோக்களும் சர்வதேச அளவில் புதிய விவாதங்களையும், சர்ச்சைகளையும் உருவாக்கியுள்ளது. (நி)

...யனில் சுனிதா 2ஆம் இடத்தில் ...க்கிறார்.

...வரது சாதனைகள் அடுத்த தலைமுறையினருக்கான சாத்தியக்கூறுகளை விரிவுபடுத்தும், உங்கள் ஓய்வுக்கு வாழ்த்துக்கள், உங்கள் சேவைக்கு நன்றி என தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஒட்டுமொத்தமாக 62 மணிநேரம் 6 நிமிடங்கள் விண்வெளியில் நடைப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

எந்தவொரு பெண் ஆராய்ச்சியாளரும் இதனை செய்தது இல்லை,

இதுமட்டுமின்றி விண்வெளியில் மாராத்தான் ஓட்டம் மேற்கொண்ட முதல் நபர் என்ற பெருமையும் சுனிதாவுக்கே உண்டு. (நி)

## தவறான தகவலைப் பரப்பியதால் பறிபோன அருமந்த உயிர்

## காணொளி மோகங்களினால் விபரீதம்

(கேரளா)

கேரளாவில் அரசு பேருந்தில் நபர் ஒருவர் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாகக் காணொளி ஒன்றை பெண் ஒருவர் வெளியிட்டதால் அவமானம் தாங்க முடியாமல் குறித்த நபர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இதற்கு காரணமான பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறித்த நபர் அரசு பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த போது, ஷிம்ஜிதா முஸ்தபா எனும் பெண் கேரளா மாநிலம் கோழிக் கோட்டை சேர்ந்த தீபக் தன்னிடம் தவறாக நடந்துகொண்டதாகத் தெரிவித்து அதனைத் தனது தொலைபேசியில் காணொளி எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார்.

சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமானோரால் பார்க்கப்பட்ட இக்காணொளியினால், குறித்த நபர் கடுமையான விமர்சனங்களுக்கும் சமூக ரீதியான அவதூறுகளுக்கும் உள்ளாகியுள்ளார்.

தான் எந்தத் தவறும் செய்யவில்லை எனத் தனது உறவினர்களிடம் தெரிவித்துப் புலம்பிய குறித்த நபர், இந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் தனது வீட்டிலேயே தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த சம்பவம் கேரளா முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அந்தப் பெண் வேண்டுமென்றே பேருந்தில் நடந்தவற்றைத் தவறாகச் சித்தரித்துக் காணொளி வெளியிட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இதன்பின்பு, பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் கேரளா டிஜிபியிடம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

முறைப்பாட்டைத் தொடர்ந்து, அந்தப் பெண் தனது சமூக வலைத்தளப் பக்கங்களை நீக்கிவிட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில், கேரளா பொலிஸார் தனிப்படை அமைத்து அவரைத் தீவிரமாகத் தேடிவந்த நிலையில் தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்பின்பு, தவறான தகவலைப் பரப்பி ஒருவரை உயிர் மாய்க்கத் தூண்டியதாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அவர் பயன்படுத்திய தொலைபேசியைப் பறிமுதல் செய்யவும் மற்றும் பேருந்தில் இருந்த சாட்சிகளிடம் விசாரணை நடத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தலைதூக்கும் தொழுநோய்

(கொழும்பு) ..........................

**2025ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 1,282 புதிய தொழுநோய் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



இவர்களில் சுமார் 10 சதவீதமானோர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஜனவரி 25ஆம் திகதி நடைபெறவுள்ள உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஊடக சந்திப்பில், சுகாதார அமைச்சின் தொழுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் யசோமா வீரசேகர முக்கிய தகவல்களை வெளியிட்டார்.

புதிதாக அடையாளம் காணப்பட்டவர்களில் 123 பேர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களாவர்.

புதிய மற்றும் மீண்டும் நோய் பாதிப்புக்குள்ளானவர்களில் சுமார் 8 சதவீதமானோர், சிகிச்சையை நாடும் போதே ஊனமுற்ற நிலையில் உள்ளனர்.

ஆரம்ப நிலையிலேயே நோயாளர்களைக் கண்டறியவும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களைப் பரிசோதிக்கவும் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் தொழுநோயாளிகளுக்கும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் இலவச சிகிச்சை வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1984- இந்து
நட்சத்திரம்: உத்தரம்
8 இல் செவ்
கி-பா: 67
உயரம்: 5"
தகைமை/தொழில்: O/L,கடை
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/16449

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: மகம்
1 இல் செவ்
கி-பா: 30
உயரம்:5'3"
தகைமை/தொழில: பூமாலை கட்டுதல்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16451

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
12 இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்- BA,கடை
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16453

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா: 27 1/4
6 இல் சூரிசெவ்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்- College, BA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/16454

பிறப்பு: 1982-இந்து
நட்சத்திரம்:ரோகிணி
கி-பா: 7 3/4
உயரம்:5'3"
தகைமை/தொழில்: A/L, Australia
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16455

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986-இந்து
நட்சத்திரம: பரணி
கி-பா: 47
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Beautician
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16487

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம் -மூலம்
7 இல் செவ்
கி-பா: 32
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16488

பிறப்பு: 1998- இந்து
நட்சத்திரம்: திருவோணம்
1 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: சித்த வைத்தியம், Doctor
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/16491

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - MA, DO
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16495

பிறப்பு: 1994 - இந்து
நட்சத்திரம்: மகம்
கிபா: 26 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma
எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்
தொ.இ: G/16452

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 526

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## இருமல்

இருமல் என்று சொல்கிறோம். cough! அதிலே முக்கியமாக இரண்டு வகை உண்டு. சில இருமல் இரசிக்கிற மாதிரி இருக்கும் அது சங்கீத இருமல்! சிலது அவஸ்தையாக இருக்கும் அது சங்கட இருமல்! மருத்துவ ரீதியாகவும் இருமலை இரண்டு வகையாக நாம் பிரிக்கலாம்.

அதாவது சில வகை இருமலுக்கு நாம் வைத்தியரைத் தேடிப் போவது அனாவசியம்! சில வகை இருமலுக்கு நாம் வைத்தியரிடம் போகவேண்டியது ரொம்ப அவசியம்! சரி ! இருமல் வருவதுக்கு என்ன காரணம்? அதற்கு ஏகப்பட்ட காரணம் உண்டு! சுவாசப் பாதையிலே ஏற்படுகிற உறுத்தல் தூசு அதிகமா க உள்ள சூழ்நிலை.

உணவுப் பொருள் தவறிப்போய் மூச்சுப் பாதையிலே நுழைந்துவிட்டால் அதை வெளியே தள்ள தும்மல் வரும். கடுமையாக உணர்ச்சிவசப்படுவது. சிறு நீரகம் செயல் இழந்துவிடுவது மார்பு எலும்புகளிலே ஏற்படும் காயம். இதனாலே கூட இருமல் வரலாம். சில வகையான நோய்களுக்கு இருமல் ஒரு முதல் எச்சரிக்கை!

நிமோனியா, ஆஸ்துமா, காசநோய், நுரையீரல், புற்றுநோய் இதெல்லாம் அதற்கு உதாரணம்! எதுமாதிரியான இருமலுக்கு வைத்தியரைப் பார்க்க வேண்டும்? இருமலோடு சேர்ந்து காய்ச்சலும் இருந்தால் அதுவும்.முக்கியமாக குழந்தைகளுக்கு இப்படி இருந்தால் - முதல் நாளே வைத்தியரைப் போய் பார்க்கிறது நல்லது. இருமும்போது இரத்தம் வந்தாலும் அது கவனிக்க வேண்டிய விடயம். புகைப் பிடிக்கின்றவர்களுக்கு இப்படி இருந்தால் அது Bronchitisக்கு அடையாளம்! நெஞ்சிலே வலி விழுங்குவதிலே கஷ்டம், மூச்சுவிட சிரமம் இப்படியெல்லாம் இருந்தால்கூட வைத்தியரைப் பாரப்பது அவசியம்.

இதுமாதிரி எதுவுமில்லாமல் வெறும் இருமலேகூட நான்கு நாளைக்கு மேலே நீடித்தால் வைத்தியரைப் பார்க்கலாம். சின்னக் குழந்தைகள் விடயத்திலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? உடனே கவனிக்க வேண்டும்?

நிலக்கடலை, சட்டை பொத்தான் பென்சில் முனை இப்படி எதையாவது முழுங்கியிருக்கும். அது மூச்சுப் பாதையிலே இருந்துவிட்டு தும்மலை உண்டாக்கும். குழந்தைக்கு இதைச் சொல்லத் தெரியாது. நாமாகத்தான் கவனித்து புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் பயப்படத் தேவை இல்லாத இருமல் எது தெரியுமா? சில பொருள் நம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் ஒவ்வாமையாலே இருமல் வரும். தும்மல் வரும். அது எதற்கு நாம் தான் கண்டுபிடித்து அதை நீக்க வேண்டும்? இருமலோடு ஜலதோஷமும் சேர்ந்து வரும் பாருங்கள். இதற்கு வைத்தியரிடம் போக வேண்டாம்.

ஒரு கேட்டிலிலே தண்ணீரைக் கொதிக்க வைத்து அந்த ஆவியை மூக்கு வழியாக உள்ளுக்கு இழுக்கலாம். ஒரு நான்கு நிமிடம் இப்படி செய்தால் போதும். Pressure Cooker இருக்குலே. அதிலே தண்ணீரை வைத்து அடுப்பை லேசாக எரியவிட்டு - அதிலே வர்ற நீராவியைப் பிடிக்கலாம். மூக்கு ஜாக்கிரதை.. ஒரு அரை அடிக்கு அப்பாலே இருந்து மூச்சு இழுக்கலாம். குழந்தைகளுக்கு இந்த வைத்தியம் வேண்டாம். அதுகளுக்கு ஜாக்கிரதையாக அதைச் செய்யத் தெரியாது! சூடான திரவங்கள் நிறைய சாப்பிடலாம்.

ஒரு கரண்டி தேன் சாப்பிடலாம். தொண்டையை இதமாக்கும். சிலபேர். இருமல் - தும்மலுக்கு மார்பிலேயும் கழுத்திலேயும் மருந்து தடவுகிறார்களே. அது பிரயோஜனப் படாது! Psychological feeling! இடத்திலே எரிச்சலை உண்டாக்கும். இந்த எரிச்சலை மூளை அதிகமாக கவனிக்கும். இதனாலே இருமல் தும்மல் அவஸ்தையை அது மறந்துவிடும். அவ்வளவுதான் விடயம்! சில பேருக்கு இந்த மருந்தேகூட அலர்ஜியாக ஆகிடும்!

சாதாரணமாக நமக்கு இருமல் - தும்மல் வராமல் இருக்க நாம் என்ன செய்யலாம்? நம் உடலிலே உள்ள எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு வழி: சத்துள்ள ஆகாரம் உடற்பயிற்சி புகைப் பழக்கத்தை விட்டுவிடுவது. மதுப்பழக்கத்தைக் குறைக்கிறது. நீச்சல் வேகமாக நடக்கிறது ஜாக்கிங் ஓடுவது சைக்கிளிங் - டான்ஸ் இதெல்லாம் சுவாச அமைப்பை வலுப்படுத்தும். துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று சொல்றோம் அது மாதிரி தும்மலைக் கண்டாலும் தூர விலகிறது நல்லது. ஒரு தும்மலிலே கோடிக்கணக்கான வைரஸ் கிருமிகள் வெளியே வருகின்றன. அடுத்தவர்களை இந்த கிருமிகள் சுலபமாக பிடித்திக்கும்!

ஜலதோஷம் - இருமல் உள்ளவர்கள் உபயோகப்படுத்தி கர்சீப், டவல் இதையெல்லாம் தொடாமல் இருக்கிறது நல்லது!

ஒரு போஸ்ட் ஆபிஸிலே ஒருவர் ரொம்பவும்" அக்கறையாக ஏதோ ஒரு லெட்டர் எழுதிக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலே நெருக்கமாக நின்று அதை இன்னொருவர் கவனித்துக்கொண்டிருந்தார். கவனிச்சிக்கொண்டிருந்த இவர் திடீர் என்று ஒரு தும்மல் போட்டார். உடனே எழுதிக்கொண்டிருந்தவர் விலகி ஓட ஆரம்பித்தார். சும்மா அவர் ஓட ஓட இவரும் அவரைத் துரத்திக்கொண்டே ஓடுகிறார். இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஒருவர் அவரை வழிமறித்துக் கேட்டார். "ஏங்க. உங்கள் தும்மலுக்குப் பயந்துபோய் தானே அவர் ஓடுகிறார். அவரை ஏன் அநாவசியமாக துரத்துகிறீர்கள்?" என்றார்.

"இதறக்கு அவர்" அப்படி இல்லைங்க. அந்த ஆள் என் பேனாவை ஓசியாக வாங்கி லெட்டர் எழுதினான். அதை கொடுக்காமல். எடுத்துக்கொண்டு ஓடுகிறான். அதனாலேதான் துரத்துகிறேன்!" என்று சொல்லிவிட்டு தொடர்ந்து ஓட ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும். ஓர் நாய்க்கான ஊசிக்குரிய கட்டணமாக 100 ரூபாய் அறவிடப்படும் என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (3)

| திகதி | நேரம் | தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 22.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | நாயன்மார் வீதி சந்தி |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | கடுக்காய் வீதி |
| | பி.ப 2.30- பி.ப.4.00 | வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடி |
| 23.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | ஆடியபாதம் வீதி வாழையம்மன் கோவிலடி |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி |
| | பி.ப 2.30- பி.ப.4.00 | செல்லர் வீதி சிறுவர் இல்லம் அருகாமை |
| 24.01.2026 | மு.ப 11.00- பி.ப.1.00 | **நடமாடும் சேவை** |
| 26.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | காசிப்பிள்ளை பாடசாலை அருகாமை |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | சங்கிலியன்மன்றம் பருத்தித்துறை வீதி |
| | பி.ப 2.30- பி.ப.4.00 | ஜமுனா வீதி |
| 27.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | செட்டியார் தோட்டம் |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி |
| | பி.ப 2.30- பி.ப.4.00 | கொண்டடிச்சந்தி |
| 28.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | யாக்கோபு பாலர் பாடசாலை |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | குமார வீதி |
| | பி.ப 2.30- பி.ப.4.00 | சங்கிலியன் வீதி |
| 29.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | நல்லூர் குறுக்கு வீதி |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | செட்டித்தெரு நல்லூர் |
| | பி.ப2.30- பி.ப.4.00 | கைலாசபிள்ளையார் கோவிலடி |
| 30.01.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | கோவில் வீதி இந்துமாமன்றம் ஒழுங்கை |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | வைமன் வீதி |
| | பி.ப2.30- பி.ப.4.00 | துர்க்கா மணி மண்டபம் |
| 31.01.2026 | மு.ப 11.00- பி.ப.1.00 | **நடமாடும் சேவை** |
| 02.02.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | பருத்தித்துறை வீதி 4 ஆம் ஒழுங்கை |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | பருத்தித்துறை வீதி நாவலர் கல்வி நிலையம் |
| | பி.ப2.30- பி.ப.4.00 | நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தி |
| 03.02.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | ஜனசக்தி சனசமூக நிலையம் அரசடி வீதி |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம் |
| | பி.ப2.30- பி.ப.4.00 | சிவன் புது வீதி |
| 05.02.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | சிவன் அம்மன் கோவிலடி |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | மணல்தரை வீதி |
| | பி.ப2.30- பி.ப.4.00 | பலாலி வீதி ஆலடிச்சந்தி |
| 06.02.2026 | மு.ப 9.00- மு.ப.11.00 | அரசடி 5 ஆம் ஒழுங்கை |
| | மு.ப 11.00- பி.ப.1.00 | பலாலி வீதி ஜே 103 கி.சே. அலுவலகம் |
| | பி.ப2.30- பி.ப.4.00 | அம்மன் வீதி நல்லூர் |

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திபிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு அபிஷேகம், மூலஸ்தான பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 350 | 300 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 180 | -- | -- |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 450 | 600 | 350 |
| தக்காளி | 600 | 550 | 500 | 600 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 280 | 220 |
| கரட் | 400 | 450 | 300 | 500 | 450 | 350 |
| பூசணி | 100 | 120 | 120 | 150 | 120 | 70 |
| புடோல் | 250 | 250 | 300 | 300 | 300 | 250 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 200 | 150 | 140 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 400 | 150 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 | 160 | 180 | -- |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 800 | 500 | 550 |
| வெண்டக்காய் | 400 | 350 | 400 | 500 | 300 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 800 | 700 | 800 | 600 | 900 | 350 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 500 | 450 | 350 |
| பீற்றூட் | 450 | 350 | 500 | 600 | 500 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 800 | 700 | 650 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 500 | 500 | 500 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 70-140 | 250 | 150 | -- | 170 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 300 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-140 | -- | 110 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 500 | -- | 425 |
| வெங்காயப்பூ | 600 | 350 | 600 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 300 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | 80 | -- | 45 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 90 |

# இராசிபலன்

22.01.2026
தை 08 வியாழக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 2.11 மணிவரை

சதயம் பிற்பகல் 2.35 மணிவரை
சுப நேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை

சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசி வழியில் தொடர்பு கொண்டு பேசலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.

**மகரம்** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ïVb D åV^, ïVõ V _ ¼ÃVª ØÃVò ØáV[ ® *ō | D þç¦ Âz D kVF©Aõ |, ï_BVõ Âïª ¡ï^ åª kVí éVD.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**கும்பம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை கூடும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், எதிலும் அவசரப்படுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல் நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, பகைவர்கள் விலகுவர்.

**தனுசு** உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** தொழில் வியாபாரத்தில் சில மாற்றங்களைச் செய்ய முடிவெடுப்பீர்கள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, காரிய அலைச்சல் சற்று கூடும்.

நீ அமைதியாக வாழ விரும்பினால் சந்தேகப்படாமல் இரு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 961





"செம்பியன் மாதேவிக்கு முழு உண்மையும் தெரிந்திராமலிருக்கலாம். யாரோ அநாதை ஊமை ஸ்திரீ பெற்று போட்டுப் போன பெண் என்று மட்டும் அறிந்திருக்கலாம். சுந்தர சோழரின் மகள் பழுவூர் இளைய ராணி என்பது ஒருவேளை தெரியாமலிருக்கலாம்.

**42 ஆம் அத்தியாயம்**

**"அவள் பெண்ணல்ல"**

இளவரசன் கரிகாலன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இளம் பிராயத்து நினைவுகள் அவன் உள்ளத்தில் அலை அலையாக மோதிக் கொண்டு தோன்றி, குமுறிக் கொந்தளித்து விட்டுப் பிறகு வேறு நினைவுகளுக்கு இடங்கொடுத்து விட்டு மறைந்தன. அந்த நினைவு அலைகளைப் பல வந்தமாகத் தடுத்து நிறுத்தி ஒரு தீர்க்கமான மூச்சு விட்டு விட்டுக் கரிகாலன்:

"போனதைப் பற்றி இப்போது பேசவேண்டாம் நடக்க வேண்டியதைப் பற்றி பேசலாம். அதற்காகவே உன்னைத் தனியாக அழைத்து வந்தேன். பந்தயத்தில் நாம் தோற்று விட்டோம். பன்றி போய்விட்டது. இனி என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று யோசித்து முடிவு செய்யலாம்.

வல்லவரையா! நந்தினியிடம் அவளுக்கும் எனக்கும் உள்ள உறவை எப்படிச் சொல்வது என்று நினைத்தாலே எனக்குப் பீதி உண்டாகிறது. அவள் முகத்தை நன்றாக நிமிர்ந்து பார்க்கக் கூட என்னால் முடியவில்லை. தப்பித் தவறிப் பார்க்கும் போதெல்லாம், வீர பாண்டியனுடைய உயிருக்காக அவள் மன்றாடிய போது எப்படி முகத்தை வைத்துக் கொண்டாளோ, அப்படியே வைத்துக் கொள்கிறாள். அவளுடைய பார்வை நெஞ்சை வாள் கொண்டு அறுப்பது போலிருக்கிறது. என் சகோதரி வீர பாண்டியன் மீது காதல் கொண்டு அவன் உயிருக்காக என்னிடம் மன்றாடினாள் என்பதை நினைத்தாலே என் நெஞ்சு உடைந்துவிடும் போலிருக்கிறது.

வல்லவரையா! உன் கருத்து என்ன? இன்னமும் அவளுக்கு உண்மை தெரியாது என்றா நினைக்கிறாய்? அவள் சுந்தர சோழரின் மகள் என்றும், எங்களுக்கெல்லாம் சகோதரி என்றும் அறிய மாட்டாள் என்றா கருதுகிறாய்?"

"கோமகனே! இவையெல்லாம் தெரிந்திருந்தால், இன்னமும் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களுடன் சேர்ந்திருப்பாரா? சோழ குலத்துக்கு விரோதமாக ஒரு சிறு பிள்ளையைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாண்டிய நாட்டு மன்னனாகவும் சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியாகவும் மணிமகுடம் சூட்டியிருப்பாரா? அந்த மணிமகுடத்தைத் தாங்கி நிற்பதாகக் கையில் கத்தி ஏந்தி சபதம் செய்திருப்பாரா? இவையெல்லாம் திருப்புறம்பியம் பள்ளிப் படையருகில் நள்ளிரவில் நடந்ததை நானே பார்த்தேன்.."

"இவ்வளவையும் பார்த்த உன்னை நந்தினி உயிரோடு விட்டு விட்டதை நினைத்தால் வியப்பாயிருக்கிறது."

"ஐயா! எனக்கு அதில் வியப்பு இல்லை. பெண் உள்ளத்தில் இயற்கையாகக் குடிகொண்டுள்ள இரக்கம் காரணமாயிருக்கலாம் அல்லவா?"

"வல்லவரையா! நீ உலகமறியாதவன். பெண் உள்ளத்தில் குடிகொண்டுள்ள வஞ்சகமும் வஞ்சனையும் எத்தகையவை என்பது உனக்குத் தெரியாது. என்ன நோக்கத்துடன் உன்னை அவள் உயிரோடு விட்டாள் என்பதை நான் அறியேன். ஆனால் என்னை எதற்காக ஓலை அனுப்பி வரவழைத்தாள் என்பது என் அந்தரங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது. இளவரசே! அது என்ன காரணமாயிருக்கும்?" என்னைக் கொன்று வீர பாண்டியனுக்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான் வரவழைத்திருக்கிறாள்."

(தொடரும்...)

# வவுனியா தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய திறப்புவிழா

வவுனியா தொழில்முனை வோர் மேம்பாட்டு மையத்தின் பிரமாண்ட திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. வட மாகாணத்தில் புதுமை, தொழில் முனைவு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை வலுப்படுத்துவதில் ஒரு வரலாற்று மைல் கல்லைக் குறிக்கிறது.

வவுனியா பல்கலைக்கழகத் துடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விதாதா மூலம் நிறுவப் படவுள்ள இந்த தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம், தயாரிப்பு சோத னை, மேம்பாடு மற்றும் பொதியிடல் வசதிகளை வழங்குவதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு (SMEs) ஆதரவளிக்கும் வகையில் திறக்கப்படவுள்ளது.

உள்ளூர் கண்டுபிடிப்புகளை வணிக ரீதியாக சாத்தியமான தயாரிப்புகளாக மாற்றுவதற்கான முக்கிய மையமாக இது செயற்படும்.

தொடக்க விழா, WiFi Zones, robotics, drones, மின்சார முச்சக்கர வண்டிகள் மற்றும் உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமைகளைக் காட்சிப்படுத்தும் ஒரு துடிப்பான SME கண்காட்சியுடன் நடைபெறும்.

இந்த நிகழ்வு, பிராந்தியத்தில் உள்ள சமூகங்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு மேம்பட்ட தொழில் நுட்பத்தை நெருக்கமாகக் கொண்டு வருவதற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இதே நாளில், இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணையம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள 50 பள்ளிகளுக்கு தலா 50,000/-ரூபா நிதியுதவியையும், கண்டுபிடிப்பாளர்கள் மன்றங்களை நிறுவுவதற்கான அதிகாரப் பூர்வ பெயர் பலகைகளும் வழங்கப்பட்டுள்ளது.

கூடுதலாக, தேசிய அறிவியல் அறக்கட்டளை 25 பள்ளிகளுக்கு அறிவியல் மன்றங்களை நிறுவ ஒப்புதல் கடிதங்களை வழங்கும். இது மாணவர்களிடையே அறிவியல் மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளை மேலும் வலுப்படுத்தும்.

இந்த மகத்தான நிகழ்வு உட்கட்டமைப்பின் கொண்டாட்டம் மட்டு மல்ல, வாய்ப்பு, புதுமை மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியின் கொண் டாட்டமாகும். இந்த மைல்கல் நிகழ்வில் பங்கேற்று பிராந்திய வளர்ச்சியில் ஒரு புதிய அத்தி யாயத்தின் ஒரு பகுதியாக இருக்கு மாறு வட மாகாணத்தின் தொழில் முனைவோர், மாணவர்கள், கல்வியாளர்கள், மற்றும் பொது மக்கள் போன்றோர் அழைக்கப்படுகின்றனர்.

ஒன்றாக, புதுமைகளை வளர்ப் போம், நமது இளைஞர்களை மேம்படுத்துவோம், இலங்கைக்கு அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நம் சுயமரியாதையில் நிலைத்திருந்தால், அது பிறரும் தன் சுயமரியாதையை மீட்டெடுக்க உதவும். – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் (மெய்)வல்லுநர் போட்டி இதோ! இல்ல அலங்காரம் ஆரம்பம்

தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் வகையில் ஒரு தரப்புத் தமிழ்க் கட்சிகள் ஒன்றாகக் கூடி ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதான செய்திகள் வெளிவந்துள்ளன.

இச்செய்திகளைப் பார்க்கும்போது அட! 2026 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஒரு பலமான ஆண்டாகும் போல் தெரிகிறது.

என்ன செய்வது ஒற்றுமைப்பட வேண்டிய நேரத்தில் ஒற்றுமைப்படாமல் இருந்த தமிழ்த் தரப்புகள், இப்போது ஒற்றுமைப்பட முற்பட்டுள்ளன என்றால் அது தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாக ஒருபோதும் இருக்காது என்பதை அடித்துக் கூறமுடியும்.

பரவாயில்லை. அவர்களுடைய நலனுக்காக ஒற்றுமைப்படுவது கூட, தமிழ் மக்களுக்கு பலமும் பயனும் உடையதாக இருந்தால், அதையும் நாம் ஏற்றுக் கொள்வதில் நியாயம் உண்டு.

எனினும் தமிழ் மக்களின் அபிலாசைகளை தயாரிப்பதற்காக குறிப்பிட்ட தமிழ்த் தரப்புகள் ஒன்றுபடுகின்றன எனில், இது வரை காலமும் தமிழ் மக்களின் அபிலாசைகள் என்ன என்பது பற்றி இத் தமிழ்த் தரப்புகள் எந்தவித ஆவணங்களையும் தயாரிக்க வில்லையா? என்ற கேள்வி எழும்.

ஆம், தமிழ் மக்களின் கோரிக்கை என்ன? அவர்களின் அபிலாசைகளை எவ்வாறு நிறைவேற்ற முடியும், அதற்கான தீர்வுகளும் அரசியலமைப்பும் எப்படியாக அமைய வேண்டும் என அக்குவேறு ஆணிவேறாக தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டம் எடுத்தியம்புகிறது.

அதிலும் இப்போது தமிழ் மக்களின் அபிலாசைகளை அட்டவணைப்படுத்தும் பொருட்டு, ஒற்றுமைப்படவுள்ள தமிழ் அரசியல் கட்சிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த, ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதில் முழுமையாகப் பங்காற்றியுள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தரப்புகள் அங்கும் இங்குமாகப் பிரிந்தும் சேர்ந்தும் அரசியல் வாழ்க்கையை கடத்துவதன் பொருட்டு, அவ்வப்போது முன்மொழிவுகளை தயாரிப்பது ஏற்புடையதன்று.

உண்மையில் தமிழ்க் கட்சிகள் ஒன்று பட்டாலும் சரி, பிரிந்து நின்றாலும் சரி, தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் அனைவரிடமும் ஒரே கருத்து நிலவ வேண்டும்.

அப்படியாயின், தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டமே எங்களின் உறுதியான முடிவு என்பதைத்தான் தமிழ்க் கட்சிகள் கூட்டாகவும் தனித்தும் வலியுறுத்த வேண்டும்.

இதைவிடுத்து ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர்களின் அபிலாசை பற்றி கதைப்பதும் விவாதிப்பதும் அறிக்கை தயாரிப்பதுமான காரியம் தமிழ் மக்களுக்கானதல்ல. மாறாக அது தேர்தல் விளையாட்டுக்கானது.

ஆம், பாடசாலைகளில் நடைபெறும் மெய்வல்லுநர் போட்டிகளின்போது இல்லங்கள் அலங்காரம் செய்யப்படும். அது கண்டு நாம் அடேங்கப்பா! எத்துணை அழகு என்று பிரமிக்கலாம். ஆனால் மறுநாள் அந்த இல்லங்கள் கலைபட்டுப்போகும்.

அதுபோன்றதுதான் எங்கள் தமிழ்த் தரப்புகளின் ஒற்றுமையும் அபிலாசைகளின் தயாரிப்புமாகும். உண்மை. இவையெல்லாம் மாகாண சபைத் தேர்தல் எனும் (மெய்)வல்லுநர் போட்டிக்கானது என்றறிவது மெய்யறிவாம்.

# வடக்குக்குச் சென்று இனவாதம் பேசாதீர்கள் நாங்கள் போராடியது புலிகளுக்கு எதிராகவே

## பாராளுமன்றத்தில் நாமல் முழக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி வடக்குக்குச் சென்று இனவாதத்தை தூண்டிவிடக்கூடாது. அரசாங்கம் தமக்கு ஏற்றாற்போல் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை (21) நடைபெற்ற டித்வா புயலின் பின்னர் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக நாங்கள் போராடினோமே தவிர தமிழர்களுக்கு எதிராகப் போராடவில்லை. கதிர்காமத்துக்குச் செல்வதற்கு தமிழர்களுக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. வடக்குக்குச் சென்று ஜனாதிபதி இனவாதம் பேசக்கூடாது.

புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. போராட்டத்தில் ஈடுபடவில்லை. தவறுகளைத் திருத்திக் கொண்டு சிறந்த முறையில் புதிய கல்விக் கொள்கையை அமுல்படுத்துமாறே குறிப்பிட்டோம். ஆளுங்கட்சியில் படித்தவர்கள் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. ஆகவே கல்விக் கொள்கையைச் சிறந்த முறையில் தயாரியுங்கள்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் பற்றிப் பேசப்படுகிறது. புத்தர் சிலையைப் பாதுகாப்பதற்காக புத்தர் சிலை அகற்றப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். ஆனால் இரண்டாம் நாளன்று புத்தர் சிலையை பொலிஸார் மரியாதையுடன் அதே இடத்தில் பிரதிஸ்டை செய்தார்கள்.

புத்தர் சிலை விவகாரத்தில் தேரர்கள் இன்றும் சிறையில் உள்ளார்கள். ஆனால் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் கைது செய்யப்படவில்லை. நாங்கள் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிராகப் போராடினோமே தவிர தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடவில்லை என்றார். (ம-7)

# சுற்றுச்சூழல் சட்டங்களை காற்றில் பறக்கவிட்ட காற்றாலைத்திட்டம்

## வனவிலங்கு பாதுகாப்புச் சங்கம் குற்றச்சாட்டு

(மன்னார்)

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய காற்றாலை மின்நிலையத் திட்டம், நாட்டின் சுற்றுச்சூழல் சட்டங்களை மீறியும் இயற்கை சமநிலையை சீர்குலைக்கும் வகையிலும் அமைந்துள்ளதாக இலங்கை வனவிலங்கு மற்றும்இயற்கைப்பாதுகாப்பு சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அந்தச் சங்கம்,

மன்னார் தீவின் புதிய காற்றாலை மின்நிலைய திட்டம் நாட்டின் மிகவும் சூழல் பாதிப்பு வாய்ந்த பகுதிகளில் ஒன்றில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் தீவு பறவைகளின் பாதையில் அமைந்துள்ள முக்கிய இடமாகும். வங்காலை, வேதித்தளத்தீவு இயற்கை தாவரங்கள் காப்பகங்கள் மற்றும் ஆடம் பாலம், கடல் தேசிய பூங்கா போன்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகளைக் கொண்டுள்ளது.

சூரிய மற்றும் காற்றாற்று மின்சார வளர்ச்சியை முழுமையாக ஆதரிக்கிறோம். என்றாலும் இந்தக் காற்றாலை சுற்றுசசூழலுக்கு மிகுந்த ஆபத்தான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கடற்கரை பாதுகாப்பு சட்டத்தின்படி தேவையான அனுமதிகள் பெறப்படாமை கடுமையான சட்டவிரோதம். திட்டத்திற்காக நடத்தப்பட்ட பறவை ஆய்வில் பல பகுதிகள் 'மிகுந்த ஆபத்து' என அறியப்பட்டுள்ளபோதிலும் அந்த இடங்களில் காற்றாலை நிறுவப்பட்டதால் பறவைகள் குறிப்பாக அகழ்வாழ் பறவைகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றன.

மேலும் மின்னோட்ட கட்டமைப்பால் மன்னார் தீவின் வெள்ள அபாயம் அதிகரித்துள்ளதாகவும் மீனவர்களும் உள்ளூர் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கிறார்கள் எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே இத்திட்டத்தின் சட்டபூர்வ தன்மையை உடனடியாக மீளாய்வு செய்ய வேண்டும் என வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் ஜனாதிபதியை கேட்டுக் கொண்டுள்ளதுடன் சுற்றுச்சூழல் சட்ட மீறல்களுக்கு பொறுப்பேற்க வலியுறுத்தி உடனடி திருத்த நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரியுள்ளது. (ம-7)

# கிளிநொச்சியில் யானைக்கு எமனான மின்சார வேலி

## ஒருவர் கைது

கிளிநொச்சி கல்மடுக் குளத்தின் கீழ் பெரும் போக நெற்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நெத்தலியாறு பகுதியில் நேற்றையதினம் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

குறித்த யானையானது பெரும்போக நெற்ச்செய்கையை பாதுகாக்கும் நோக்குடன் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில்,

குறித்த பகுதியில் அனுமதியின்றி மின்சார வேலியை அமைத்த சந்தேகநபர் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின் இன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பௌத்தத்தை பாதுகாப்பது ஆட்சியாளர்களின் கடமை

## முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

அந்நியர் ஆட்சிக் காலத்தில்கூட பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த பின்னணியில், தற்போதைய ஆட்சியாளர்கள் அப்பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள முடியாது

விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய விகாரைகளுக்குச் சொந்தமானவை விகாரைகளுக்கும் தேவாலயங்களுக்குச் சொந்தமானவை தேவாலயங்களுக்கும் உரியனவாகும். நாம் வழங்கும் தங்க நகைகள் அனைத்தும் விகாரைகளுக்கோ அல்லது தேவாலயங்களுக்கோ சொந்தமானவை. அவற்றில் கை வைக்கச் சென்று நாட்டுக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது.

1815 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றிருந்தார். இதை ஏற்றுக்கொண்டு மகா சங்கத்தினருடன் இணைந்து இதனைப் பாதுகாப்பது அனைத்துக் கட்சிகளினதும் கடமையாகும் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 03

என்.சொக்கன்

இதெல்லாம் கூடப் பரவாயில்லை. இத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு, டொனொவன் உள்ளிட்ட உளவாளிகள் திரட்டி அனுப்புகிற தகவல்கள், சரியானபடி பயன்படுத்தப்படவில்லை. ஏதோ பேப்பர் படிப்பது போல் அதைப் புரட்டிவிட்டு மூலையில் வீசுவதுதான் வழக்கமாக இருந்தது.

இதையெல்லாம் பார்த்த டொனொவன், வெறுத்துப் போய் விட்டார். அமெரிக்க அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் என்று யாருக்கும் உளவுத்துறையின் முக்கியத்துவம், அவசியம் புரியவில்லையே என்று வேதனைப்பட்டார் அவர்.

இந்தச் சூழ்நிலையிலும், டொனொவன் தனது முயற்சிகளைக் கைவிடவில்லை. உளவுத் துறைக்குக் கூடுதல் பலம் வேண்டும். அதன் நடவடிக்கைகள், கண்டுபிடிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

அப்போதுதான், ஜப்பான் அமெரிக்காவைச் சீண்டத் தீர்மானித்தது. பேர்ள் துறைமுகத்தில் திடுதிப்பென்று புகுந்து ஓர் ஆட்டம் ஆடிவிட்டுப் போய்விட்டார்கள்.


பேர்ள் துறைமுகத் தாக்குதல், அமெரிக்கர்களை ஒரு மிகப் பெரிய அதிர்ச்சிக்குள் தள்ளியது. "நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை, நாம் சௌகரியமாக, பாதுகாப்பாக இருக்கிறோம்" என்கிற உணர்வை உடைத்து, கொஞ்சம் மினக்கெட்டால் அமெரிக்காவைக்கூட யாரேனும் அடித்துச் சாய்த்துவிடமுடியும் என்று புரியவைத்தது.

அந்த பய உணர்வை, சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார் டொனொவன். "இதைத்தான் நாங்கள் இத்தனை நாளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒரு பலமான உளவுத்துறை இருந்திருந்தால், இப்படி ஒரு திடீர்த் தாக்குதல் நடந்திருக்குமா?" என்று கேட்க வேண்டிய விதத்தில் கேட்டார்.

முதன்முறையாக, டொனொவனின் வார்த்தைகளை மரியாதையோடு கவனிக்கத் தொடங்கியது அமெரிக்க அரசாங்கம். அவர் சொல்வதுபோல், நமது உளவுப் படையை வலுவாக்குவது அவசியம் என்று இப்போது அவர்களுக்குப் புரிந்தது.

இன்றைக்கு ஜப்பான், நாளைக்கு வேறு யாரோ. அமெரிக்காவின் விரோதிகள் உலகம் முழுக்க இருக்கிறார்கள். வருங்காலத்தில் அவர்களில் யாரும் இப்படி ஒரு தாக்குதலில் ஈடுபடாதபடி தடுக்கவேண்டுமென்றால், அமெரிக்காவைச் சுற்றிலும் கண்கள் வேண்டும். யார் எந்தப் பக்கம் அசைந்தாலும், அது நமக்கு எதிரான அசைவா என்று கவனித்து, எதிர் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்றார் டொனொவன்.

இந்தக் காலகட்டத்தில், அமெரிக்காவும் இரண்டாம் உலகப் போரில் குதித்துவிட்டதால், அபாயம் மேலும்



அதிகரித்திருந்தது. இதைச் சமாளிப்பதற்காக, COI அமைப்பு வலுப்படுத்தப்பட்டது.

ஆனால், இந்த வேலைக்கு COI போதாது, இதைவிட பலமான இன்னொரு விசேட உளவு அமைப்பு வேண்டும் என்றார் டொனொவன். பேர்ள் ஹார்பர் அதிர்ச்சி இன்னும் விலகியிருக்காத சூழ்நிலையில், டொனொவனின் இந்தக் கருத்தை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

COI உருவாக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஓராண்டு முடிகிற சூழ்நிலையில் (ஜூன் 1942), இராணுவ உத்தரவின்படி OSS (Office Of Strategic Services) என்ற இன்னொரு உளவு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக வில்லியம் டொனொவன் அறிவிக்கப்பட்டார்.

ஆனால் இப்போதும், முழுக் குடுமியையும் டொனொவன் கையில் கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லை. ஆகவே, OSS உலகப் போருக்காக உருவாக்கப்பட்ட தற்காலிக அமைப்பு மட்டுமே என்று தெள்ளத் தெளிவாக அறிவித்துவிட்டார்கள்.

அதுமட்டுமில்லை, ஏற்கெனவே அமெரிக்காவின் உள்நாட்டு விவகாரங்களை கவனிப்பதற்குக் காவல்துறை, FBI (Federal Bureau of Investigation) போன்ற அமைப்புகள் இருந்தன. அவற்றுக்கும் இந்தப் புதிய அமைப்புக்கும் அதிகாரப் போட்டி வந்து விடக்கூடாது என்பதற்காக, OSS வெளிநாடுகளின் நடவடிக்கைகளை மட்டும்தான் உளவு பார்க்க வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இதைப்பற்றியெல்லாம் டொனொவன் அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. அவர் எதிர்பார்த்தபடி சகல அதிகாரங்களுடனும் ஓர் உளவுத்துறை கிடைத்துவிட்டது. இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால், இதனை நிரந்தரமாகச் செயல்படும் ஓர் அமைப்பாக மாற்றிவிடலாம் என்று உறுதியாக நம்பினார் அவர்.

OSS க்காக, அமெரிக்க இராணுவம் மற்றும் பிற துறைகளில் பணியாற்றிக்கொண்டிருந்த மிகச் சிறந்த உளவுத்துறை நிபுணர்கள் ஒன்று திரட்டப்பட்டார்கள். இவர்களும், இவர்களிடம் பயிற்சி பெற்ற மற்ற ஜூனியர்களும் அமெரிக்காவின் வெளிநாட்டு உளவுப் பணிகளைத் தொடர்ந்தார்கள்.

இந்தக் குழுவினர், அமெரிக்காவின் எதிரி நாடுகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நுணுக்கமாக அலசினார்கள். அவர்களுடைய படைபலம், வருங்காலத் திட்டங்கள், அவர்களால் வரக்கூடிய அபாயங்கள் என்று சகலதையும் தொகுத்து அரசாங்கத்துக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

வருங்கால சிஐஏ வின் அடித்தளம், டொனொவன் உருவாக்கிய இந்த OSS தான். அதனால்தான், டொனொவனை "சிஐஏ வின் தந்தை" (Father Of CIA) என்று அழைக்கிறார்கள்.

டொனொவன் காலத்தில், உளவுப்பணி என்பது அதிபுத்திசாலி கள் மட்டுமே செய்யக்கூடிய ஒரு வேலையாகக் கருதப்பட்டது. இதனால், அமெரிக்காவின் மிகப் பெரிய பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வந்தவர்களுக்கு மட்டும்தான் OSSஇல் வேலை கிடைத்தது. முக்கியப் பதவிகளும் அவர்களுக்குதான் தரப்பட்டன.

பின்னர் சிஐஏவின் ஆரம்ப நாட்களில்கூட, இந்த நிலைமை தொடர்ந்தது. பரீட்சையில் நல்ல மார்க் வாங்குவதற்கும், உளவு பார்ப்பதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அவர்கள் புரிந்து கொண்டது மிகத் தாமதமாகதான்.

எந்த நாட்டிலும், அரசாங்கம் அரசியல்வாதிகளுக்கு அதிபுத்திசாலிகள் என்றால் ஆகாது. இதனால் அப்போதைய அமெரிக்க ஆட்சியாளர்கள் டொனொவன் மற்றும் OSS அமைப்பை நினைத்துக் கொஞ்சம் கவலைப்பட்டார்கள். அவர்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கத் தயங்கினார்கள்.

காரணம், OSS அமைப்புக்கு அதிக சுதந்திரம் கொடுத்தால், நாளைக்கு அவர்கள் அரசாங்கத்தையே கட்டுப்படுத்தும் அளவுக்கு வளர்ந்துவிடுவார்கள் என்று ஆட்சியாளர்களுக்குத் தயக்கம். இதனால், பெரும்பாலான அதிகாரிகள் கொஞ்சம் நடுக்கத்துடன்தான் உளவுத்துறை வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில், இரண்டாம் உலகப் போர் முடிந்தது. இதுதான் சாக்கு என்று OSS அமைப்பைக் கலைத்துவிட்டார்கள். அதன் பொறுப்புகளை உள்நாட்டு அமைப்புகளே மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது.

"இந்த ஆட்சியாளர்களுக்குப் புத்தியே வராதா?" என்று தலையில் அடித்துக்கொண்டார் டொனொவன். போர் முடிந்ததும், அமெரிக்காவுக்கு வரக்கூடிய அபாயங்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்று யார் சொன்னது?. எந்நேரமும் எச்சரிக்கையாக இருப்பதுதானே நாட்டின் பாதுகாப்புக்கு நல்லது?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரித்தானியா...

அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் உயர்ஸ்தானிகர், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பு மிகவும் அத்தியாவசியமாகவுள்ளதாகவும், தகவல் தொழில்நுட்பம் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் எமது இளைஞர் யுவதிகள் திறமை பெற்றுள்ளதாகவும், பொருத்தமான வேலைவாய்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் மாவட்டம் மற்றும் நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடையும் எனவும் தெரிவித்தார்.

மேலும் பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என தாம் நம்புவதாகவும் தெரிவித்து, மாவட்டத்தின் தற்போதைய சமூகப் பொருளாதார முன்னேற்ற நிலைமைகள், காங்கேசன்துறை முதலீட்டு வலயம், முதலீட்டு வாய்ப்புக்கள் போன்ற விடயங்களை அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பில் பிரித்தானிய உயர்ஸ்தானியகத்தின் அரசியலுக்கான இரண்டாம் செயலாளர் இராமன் செட்டியார், அரசியலுக்கான அலுவலர் ஃபாறா பிர்தௌஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

## 16ஆவது...

சனிக்கிழமை, 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களிலும் குறித்த கண்காட்சி இடம்பெறவுள்ளது.

குறித்த கண்காட்சி தொடர்பில் தெளிவூட்டும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

அதன்போது கண்காட்சி தொடர்பில் யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றத்தினர் தெரிவிக்கையில், பொருளாதார முன்னேற்றத்திற்கான வடக்கின் நுழைவாயில் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது இம்முறை 16ஆவது தடவையாக மிகச்சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் 78,000 வரையான பார்வையாளர்கள் வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பல்வேறுபட்ட வர்த்தகர்களால் 400க்கு மேற்பட்ட காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயம், தொழில்நுட்பம், விருந்தோம்பல், கல்வி, உணவு நவநாகரிகம் மற்றும் இதர தொழிற்துறைகள் என பல்வேறுபட்ட வர்த்தக நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் சேவைகள் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படவுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தவும், வடக்கிலுள்ள சமூகங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பல்வேறு வகையான உற்பத்திகள் மற்றும் சேவைகளை அறிந்து கொள்வதற்கும் தெற்கு மற்றும் சர்வதேச தொழில் முயற்சியாளர்கள் வடக்கிலுள்ள சக தொழில் முயற்சியாளர்களைச் சந்தித்து வியாபார பொருளாதார தொழில்நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்க்கவும் எமது தொழில் முயற்சியாளர்கள் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அவற்றின் வினைத்திறனான செயற்பாடுகளை அறிந்து பயனடையும் களமாகவே யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமைந்துள்ளது.

இம்முறை எமது உற்பத்திகளையும் முன்னிலைப்படுத்தும் நோக்குடன் மேலதிக புதிய காட்சிக்கூடங்களும் இட ஒதுக்கீடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மற்றைய காட்சிக்கூடங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்த விலையில் இக்காட்சிக் கூடங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் வழமை போலவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உள்ளூர் நுண்ணிய சிறிய தொழில் தமது வியாபார வலையமைப்பை முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்காக காட்சிக்கூடங்கள் அமைப்பதற்கான இலவச இட ஒதுக்கீடுகள் மேம்படுத்திக்கொள்வதற்கான களமாகவும் இக்கண்காட்சி அமைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணமாக 200 ரூபாய் அறவிடப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் தொனிப்பொருளான பொருளாதார முன்னேற்றத்திற்கான வடக்கின் நுழைவாயில் என்பதன் அர்த்தத்தையும் அதனால் நாம் அடைந்துள்ள மற்றும் அடையப் போகும் சாதகமான விளைவுகளையும் கருத்தில் கொண்டு சகல தரப்பினரும் செயற்பட வேண்டிய ஒரு கடமைப்பாடு உள்ளது எனத் தெரிவித்தனர்.

குறித்த கண்காட்சிக்கான அச்சு ஊடக அனுசரணையை வலம்புரி பத்திரிகை நிறுவனம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காட்சி...

ரி20 உலகக் கிண்ணப் போட்டியில் வழங்கப்படும் கிண்ணத்தை, நாட்டில் காட்சிப்படுத்தும் சுற்றுப் பயணம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி, சுற்றுப்பயணத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று (21) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

21ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை நான்கு நாட்களுக்கு நாட்டின் பல பிரதான நகரங்களில் இது காட்சிப்படுத்தப்படுவதோடு, கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச மைதானத்தில் நடைபெறும் இலங்கை-இங்கிலாந்து ஒருநாள் போட்டியின் போது விளையாட்டு ரசிகர்கள் இந்தத் தங்கக் கிண்ணத்தை அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

அதன் பின்னர் கிண்ணம் கண்டி, தம்புள்ளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கு எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதுடன், அங்கு அந்தப் பகுதிகளில் வசிக்கும் விளையாட்டு ரசிகர்கள் உலகக் கிண்ணத்துடன் நினைவுப் புகைப்படங்களை எடுக்கவும் அதைப் பார்க்கும் வாய்ப்பும் வழங்கப்படும். (ம-7)

## 7 இந்திய...

நடவடிக்கையில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்கள் பயணித்த இரண்டு இயந்திரப் படகுகள் மற்றும் அவர்களின் மீன்பிடி வலைகள் உள்ளிட்ட உபகரணங்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுப் புதன்கிழமை சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, அவர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 6081
H 2 9 2 4 2 0
அத சம்பத
H 2 4 2 0
சீட்டிழுப்பு இலக்கம் 0656
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.21
197
சிங்கம் 53 57 62
7273

தன நிதானய
திகதி - 2026.01.21
சீட்டிழுப்பு இலக்கம் - 2111
G 22 52 54 65 G

மெகா பவர்
திகதி 21/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2429
L 21 10 33 46 75

ஜய
திகதி 2026.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 0349
Q 1 5 9 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4323
சீட்டிழுப்பு திகதி 21.01.2026
V 06 12 44 63
V

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 1390
விருச்சிகம் 06 29 33 41 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.01.2026 வெற்றி வாரம் 0789
W 3 0 1 4 3 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,428,878.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3055
சீட்டிழுப்பு திகதி 2026.01.21 தினம் புதன்கிழமை
04 05 22 66 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 91,553,805.60

சனிதா
திகதி 21.01.2026 வெற்றி வாரம் 5216
10 33 34 48 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,734,942.40

சசிரி
வெற்றி வாரம் 885
21.01.2026 புதன்கிழமை
04 18 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,979,320.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4767
சீட்டிழுப்பு திகதி 21.01.2026 தினம் புதன்கிழமை
03 08 10 20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 03 27 35 49 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.622,358,390.20
2231
21.01.2026 புதன்கிழமை

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் 2881
சீட்டிழுப்பு திகதி 2026.01.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,692,637.60
07 30 34 71 T


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4862)

**076 825 7716** (ஆகாஸ்)

## மாப்பிள்ளை தேவை

01. புங்குடுதீவு - வேலணை, இந்து, ரேவதி, 1992, Canada university, Graduate, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (39709)
02. தெல்லிப்பழை - ஏழாலை, இந்து, 1994, சித்திரை, Regiterd nurse, Swiss citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (37402)
03. மானிப்பாய், இந்து, 1993, MBBS, LLB, Lawyer, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(37015)
04. தெல்லிப்பளை - நல்லூர், இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MO Doctor, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36611)
05. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம், MBBS, Doctor, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36481)
06. மீசாலை - புலோலி, இந்து, 1993, அவிட்டம், BSc Hons, software Engineering, Singapore citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (34791)
07. அல்வாய் - கோப்பாய், இந்து, 1993, ரோகிணி, Phd lecturer, canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33627) (நிறைந்த சீதனம் உண்டு.)
08. புங்குடுதீவு - வேலணை, இந்து, 1992, பூரம், ACCA complete, Accountant, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33548)
09. காரைநகர், இந்து, 1992, பூராடம், MBBS Doctor, srilanka பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33307)
10. வேலணை, இந்து, 1992, ரேவதி, MBBS, Doctor, Srilanka பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32198)

(C-4860)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

**S.Sharma J.P** | 077 539 3728
**www.thaalee.com** | 077 992 1494

## முறையான ....

குறித்த தரப்பினருடன் நேற்று (21) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

தற்போதுள்ள சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி, தேசிய கல்வி நிறுவகத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பின் மூலம், கல்வி மறுசீரமைப்புகளை செயல்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இங்கு எடுத்துக்காட்டினர்.

புதிய கல்வி மறுசீரமைப்புகளுக்கான தேவையை தமது சங்கம் ஏற்றுக்கொள்வதாகவும், நகர்ப்புற பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளை விட கிராமப்புற பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகள் தேவைப்படுவதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் கல்வியைப் பாதுகாக்க அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் ஜனாதிபதி இதன் போது உறுதியளித்தார். (ம-7)

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் அனுபவம் உள்ளவர்கள் ஆண், பெண் உடன் தேவை. (C-4861)

**077 748 8093**

### விற்பனையாளர் தேவை (பெண்)

யாழ். நகரில் இயங்கும் எமது பிடவை கடைக்கு வியாபாரம் பழகியவர்களும் பழக ஆர்வம் உள்ளவர்களும் பெண் விற்பனையாளர்கள் தேவை.
35,000 + O.D (6624)

**சென்னை பெசன் வேல்ட்**
**077 667 0046**

### வீடு வாடகைக்கு

யாழ். நகரில் இருந்து 100m தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு, அறைகள் குறுகிய காலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு. (6616)

**076 363 5249**

## பராமரிப்பாளர் தேவை

யாழ். நகரில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரை தங்கியிருந்து பராமரிக்கக்கூடிய பராமரிப்பாளர் ஒருவர் அவசரமாகத் தேவை. உணவு சமைப்பதில் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். (6622)

தொடர்புகளுக்கு : **076 251 8912**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.